திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட விஷயம் மாதிரியல்ல இது. ரொம்ப நெருங்கிய விஷயம். அது பாயின்ட் நம்பர் ஒன். அந்த்து சேகரிக்க வேண்டுமென்று சொல்வது உண்மையல்ல. ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜ்மெண்ட் கொடுத்து அரசாங்கத்தை டையரக்ட் பண்ணி இருக்கக்கூடிய விஷயம் அவர்களும் அட்மிட் செய்திருக்கிறார்கள். ஆகவே என்றைக்கோ நடந்த விஷயமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சேகரிக்க வேண்டுமென்று சொன்னது புதிதாகச் சேகரிக்க வேண்டும் என்பது அல்ல, அந்தக் கேள்விக்கு இலாகா மூலமாகத்தான் பதில் சேகரித்துக் கொண்டுவர முடியும். நீங்கள் கேட்கிற தகவலை இலாகாவிடம் கேட்டுச் சொல்கிறேன் என்றுதான் சொல்கிறார். மாயூரம் அப்படி அல்ல, நேற்று நடந்த நிகழ்ச்சி. அது அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறது. எனவே அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்துவது சரியல்ல.

திரு கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, தலைவரவர்கள் சொன்னது சரியா இருக்கலாம். இடைவெளி வந்தால் பிரச்சினை ஏற்படுகிறது. எங்கேயோ இழுத்துச் செல்லப்படும் என்பது உங்களுக்கும் தெரியும். ஆகவே, கேள்வி நேரத்தில் அப்படிப்பட்ட இடைவெளிக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் இருப்பது நல்லது என்ற ஆலோசனையைத் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் தேக்கம்.

*வினா எண் 478— திரு கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூரைச் சுற்றிலுமுள்ள ஏராளமான கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் துணி தேக்கத்தால் நெசவாளர்கள் சுமார் 20,000 பேர் வேலையற்றியிருக்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*திரு வினா எண் 479—வி. கே. கோதண்டராமன், திரு என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

25 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி தேங்கியுள்ளது பற்றி தமிழக அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது?